ISSN:2582-9599



# தமிழர் வாழ்வியல் சார்ந்த மெய்யியல்

முனைவர் சு.சு.ஷிபா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் - 629 165.

13

**ஆய்வு சுருக்கம்**

பண்டையத் தமிழ் இலக்கியங்கள் தமிழர் வாழ்வியலோடு மெய்யியல் சார்ந்த கருத்துக்களையும் பதிவு செய்துள்ளது. மனிதன் தான் வாழும் வாழ்வின் அர்த்தம் என்ன? என்று சிந்திக்கும் போதுதான் வாழ்வின் உண்மையை உணர்கிறான். தனக்கு வரும் துயரங்களைத் தீர்த்துக் கொள்வதற்காகச் சிந்தனையில் ஆள்கிறான். அது அவனை இன்னொரு கோணத்தில் சிந்திக்கத் தூண்டுகிறது. தனக்காக வாழ்வது வாழ்க்கை இல்லை, பொருளையும், அதிகாரத்தையும் சேர்ப்பதும் வாழ்க்கையில்லை, பிறருக்காக வாழவேண்டும் என்ற வாழ்வியல் சார்ந்த மெய்யியல் அவனைப் புரியவைக்கிறது. இப்புரிதலானது மனிதர்களாகப் பிறந்த அனைவரிடமும் மலரும்போது தமிழர் கண்ட வாழ்வியல் சார்ந்த மெய்யியல் தழைத்தோங்கும்.

**திறவுச்சொற்கள்:**

மெய்யியல் - தத்துவம் - வல்லரசுகள் - வர்க்க வேறுபாடு – அறம் - வறுமை.

**முன்னுரை:**

பண்டையத் தமிழ் மக்களின் வாழ்வியலை நமக்கு அறிவிப்பவை அக்கால இலக்கியங்கள். அவை அம்மக்களின் நாகரிகம், பண்பாடு, பொருளாதாரம், அரசியல், சமூகம், திணை, துறை என அனைத்தையும் வெளிப்படுத்தினாலும், அவற்றோடு மெய்யியல் சார்ந்த வாழ்வியலையும் பதிவு செய்துள்ளது. பண்டையக் கால மக்கள் நாகரீகமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள். பழி, பாவங்களுக்கு அஞ்சியவர்கள். முடிந்த அளவிற்கு உண்மை பேசியவர்கள் என்ற வாழ்வியல் உண்மைகளோடு மெய்யியல் சார்ந்த அறவாழ்விற்கும் சான்றாய் திகழ்ந்தவர்கள் என இலக்கியங்கள் பதிவு செய்துள்ளது. இவ்வாய்வுக் கட்டுரையானது தமிழ் இலக்கியங்கள் வழி பண்டைய தமிழரின் வாழ்வியல் சார்ந்த மெய்யியலை ஆய்வதாக அமைந்துள்ளது.

**மெய்யியல்:**

மெய்யியல் குறித்து பல அறிஞர்கள் பல விளக்கங்களைக் கொடுத்தாலும் முக்கியமான வரையறை வாழ்வின் அர்த்தம் என்ன? என்பதுதான். மனித வாழ்வில் ஏற்படும் துயரங்கள் அவனை இன்னொரு கோணத்தில் சிந்திக்கத் தூண்டுகிறது. மரணத்தோடு வாழ்க்கை முடிவடைந்துவிடுகிறதா? சமூகத்தில் தன் இருப்பு என்ன? வாழ்வின் அர்த்தம் என்ன? என்ற கேள்விகளை அவன் மனம் எழுப்புகிறது. கேள்விகள் ஒன்றான இருந்தாலும் விடைகள்தான் மாறிக்கொண்டும், புதிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுக்கொண்டும் வருகின்றன. 'உண்மை காணவேண்டும் என்ற வேட்கையில் மனிதனால் கட்டுரைக்கப்படும் கருத்துக்களே 'தத்துவம்' என்று வடமொழியிலும்

'மெய்யியல்' என்று தமிழிலும் சுட்டிச் சொல்லப்படுகின்றன.'1 பொருளையும், அதிகாரத்தையும் சேர்த்துக்கொள்வதற்காக மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகளே அவனை வாழ்வின் அர்த்தம் என்ன? என்று சிந்திக்கத் தூண்டுகிறது. 'பொருளையும் அதிகாரத்தையும் சேர்த்துக் கொள்வது வாழ்க்கை இல்லை. வாழ்க்கை எளிமைப்படவேண்டுமென்றால் அறம் தழைக்க வேண்டும்'.2 என் வாழ்க்கை எனக்காக மட்டுமல்ல பிறருக்காகவும் என்னும் எண்ணம் வளர வேண்டும். அன்பில், மனித உறவுகளில் மனிதன் பிறருக்காகத் தன்னை இழக்கின்ற மனநிலை வளர வேண்டும் என்றால் மட்டுமெ பழந்தமிழர் கண்ட மெய்யியல் தழைத்தோங்கும்.

**புறநானூறு:**

பண்டையக் காலத்தில் தமிழ்ச் சமூகம் பொதுமைச் சமூகமாகக் காணப்பட்டது. காலம் செல்லச் செல்ல சமூகத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகள், தனிஉடைமை, அரசு அதிகாரம் போன்றவை மிகப் பெரும் பிளவுகளை ஏற்படுத்தின. முதலாளிகள், வல்லரசுகள், மதநிறுவனங்கள் போன்றவை மக்களின் உழைப்பைச் சுரண்டி தம் இருப்பை சமன் செய்தன. சங்க இலக்கியங்கள் தோன்றிய காலம், அவற்றுள்ளும் 'புறநானூற்றுக்காலம் சமய நிறுவனங்கள் இல்லாத காலம். அதனால் மெய்யியல் கருத்துக்கள் பாடல்களில் பரவலாக இடம்பெற்றிருப்பதைத் காணமுடிகிறது'3 புறம் - 189-ஆம் பாடலில் நக்கீரர் என்னும் புலவர்,

'உண்பது நாழி; உடுப்பவை இரண்டே;
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே'4

(புறநானூறு – பாடல் - 189)

என்கிறார். வாழ்க்கை எளியதாகவே அமைய வேண்டும். உண்பது நாழி அரிசி உணவு. உடுப்பது மேலாடை, கீழாடை என்ற இரண்டு. பிறத்தேவைகளும் இதுபோன்று சுருங்கியதாகவே அமைய வேண்டும். நம்மிடம் வந்து சேருகின்ற செல்வத்தின் பயன் என்பது ஈதல். அதை நாமே வைத்து அனுபவிப்போம் என்றால் நாம் வாழ்வில் இழந்துவிடுவது பலவாகும். பிறருக்குக் கொடுத்து வாழ்ந்தால் நம்முடைய சாவைக் கூட சமூகம் விரும்பாது என சமதர்ம உலகிற்கு வித்திட்டுள்ளது இப்பாடல்.

**திருக்குறள்:**

புறநானூறு பொதுவுடைமைச் சமூகத்திற்கு வித்திடுவது போலவே வள்ளுவர் ஒப்புரவிற்கு வித்திட்டுள்ளார். பேரறிவாளனிடம் சேரும் செல்வம் ஊருணி நீரால் நிறைவு பெறுவது போன்றது என்கிறார்

'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு'5

மழை தானே பெய்து,ஊருணி தானே நிரம்புகிறது. ஊருணியிலிருந்து நீர் எடுப்பதற்கு எவரிடமும் கேட்க வேண்டாம். கேட்காமலே எடுத்துக்கொள்ளலாம். அதுபோலவே,

'பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கண் படில்'6

நயனுடையவனிடம் சேரும் செல்வம், பயன்மரம் உள்ளூரில் பழுத்தது போன்றது என்கிறார் வள்ளுவர். மரம் ஊருக்குப் பொது. பழங்கள் எல்லோருக்கும் பொதுவானவை. அதுபோல மழைநீர் தனி ஒருவருக்கும் சொந்தம் ஆகமுடியாது. ஊருணியும் ஊர்மக்களுக்கான பொதுவுடைமை. தனி ஒருவனுக்கு சொந்தம் ஆக முடியாது. நிலத்தில் தனி உடைமை தேவை இல்லை. ஒருவனிடம் சேரும் செல்வத்துக்கு அவன் மட்டுமே காரணம் ஆக முடியாது. ஊரே கூடி உழகை;கும் போதுதான் ஒருவனிடம் சேருகிறது செல்வம். எனவே எனக்குத்தான் இதன்மீது உரிமை என்று கூறுபவன் அன்பற்றவன் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார் வள்ளுவர்.

**சிலப்பதிகாரம்**

சங்ககாலம் பொதுவுடைமைக்காலம் என்ற நிலைமாறி காப்பியக்காலம் என்று வரும்போது வர்க்க வேறுபாடுகள் மிகுந்த காலமாக அறியமுடிகின்றது. சமுதாயத்தில் வர்க்க வேறுபாடுகள் மிகுந்த நிலையில் கோவலன் திருடன் என்று அறியப்படுகின்றான். அந்நிய நாட்டில் பிழைக்க வந்தவன் கையில் எப்படி விலைமதிப்பற்ற சிலம்பிருக்க முடியும். ஆகவே அவன் கள்வன் கொல்லப்படுதலுக்குரியவன் என்று பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் தீர்ப்பு வழங்கி அறத்திற்கு களங்கம் கற்பித்தான். ஆனால் அவன் களங்கம் விளைவித்த அறமே அவனுக்குக் கூற்றுவனாக வந்து அவனைக் கொன்றது. இப்படி ஏற்றத்தாழ்வு கொண்ட சமூகத்தில் சான்றோர் கற்புடையவர்கள் வாழ முடியாது என தமிழ் அறத்தை முன்வைக்கிறார் இளங்கோவடிகள்.

**மணிமேகலை**

வர்க்க வேறுபாடுகளின் மிகுதியினால் சமூகத்தில் செல்வந்தன், ஏழை என்ற நிலை வலுபெற்றது. அப்போது வறுமை ஒரு பெரும் பிரச்சனையாக மாறியது. வறுமையைச் செல்வந்தர் தீர்க்க முடியாது. என்ற நிலை வந்தது. தெய்வமே முன்வந்து உதவினாலொழிய வறுமைத் தீராது. எனவே ஆபுத்திரன் என்ற படிமம் முன்வைக்கப்படுகிறது. ஆபுத்திரன் சிந்தாதேவி என்ற இறைவியிடம் முறையிட அத்தெய்வம் அவனிடம் அமுதசுரபி என்ற பாத்திரத்தைத் தந்தது. அதிலிருந்து பலருக்கு அவன் உணவளித்து பின் அப்பாத்திரம் மணிமேகலையின் கைக்குத் திரும்புகிறது. இதில் மனிதனுக்கு உதவி செய்தால் அவன் தெய்வம.; வறுமை என்பது பெரும்பிரச்சினை என்ற மெய்யியல் உணர்வு முன்வைக்கப்படுகிறது. வாழ்க்கை எல்லா நிலைகளிலும் சில பிரச்சினைகளோடுதான் இருக்கிறது. இந்த சூழலோடு ஒத்தும், விடுபட்டும் வாழ வேண்டும் என்ற நம்பிக்கையையும் தருகிறது.

**சித்தர் இலக்கியங்கள்**

தமிழிலக்கியத்திற்கு மையமென்று சித்தர் இலக்கியத்தைக் கூறமுடியும். சித்தர் நெறி என்பது தமிழர்களுக்குரிய சிறப்பு நெறி என்று சொல்லுமளவிற்கு நெடுங்காலமாக இருந்து வருகிறது. இவர்களுக்குச் சாதி இல்லை. மதம் இல்லை. சடங்குகள் இல்லை. செல்வத்தோடும், அதிகாரங்களோடும் இவர்களுக்கு ஒட்டுறவு இல்லை. ஆழ்ந்து பார்த்தால் வேளாண்மைச் சமூகத்தில்

இவர்கள் வேர் பிடித்தவர்கள். இயற்கையோடு இரண்டறக் கலந்தவர்கள். இயற்கையைத் தமக்குள் உள்வாங்கிக் கொண்டவர்கள். அன்பையும், அறத்தையும் சேர்த்தே சமூகத்திற்கு அள்ளித் தூவியவர்கள். இவர்கள் இலக்கியங்கள் சமதர்ம சமூகத்திற்கு வித்திடும் மெய்யியல் வாழ்வைப் பிரதிபலிப்பவையாகவே அமைந்துள்ளன.

**முடிவுரை**

எந்த ஒரு மனிதனையும் தனிமனிதன் என்று சொல்லமுடியாது அவனுக்குள் எல்லாமே ஏதோ ஒரு வகையில் கலந்துள்ளன. ஆட்சி, அதிகாரம், சாதி, மதம் முதலியவை அவனுக்குள் குறுக்கீடாக நிற்கும்போது அதை உடைத்தெறிந்து தன் ஆளுமையை வெளிப்படுத்தி மெய்யியல் வாழ்வுக்கு நேராக அடியெடுத்து வைக்கிறான் என்பதே உண்மை.

**அடிக்குறிப்புக்கள்**

1. கோவை வாணன் - சங்க இலக்கிய மெய்யியல் பக் – 1,2
2. ஞானி – தமிழியம் தழித்தேசியம் - பக் - 11
3. கோவை வாணன் - சங்க இலக்கியம் மெய்யியல்
4. புறநானூறு – பாடல் - 189
5. திருக்குறள் - ஒப்பரவளிதல் - 215
6. மேலது – ஒப்புரவளிதல் - 216
7. சிலப்பதிகாரம்

**துணைநூற்பட்டியல்:**

1. கோவை வாணன் - சங்க இலக்கிய மெய்யியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் அம்பத்தூர் - சென்னை -50, முதற்பதிப்பு – 2013
2. ஞானி – தமிழியம் தமிழ்த்தேசியம் - காவியா கோடம்பாக்கம் - சென்னை -24, முதற்பதிப்பு ஸ்ரீ 2007.
3. புறநானூறு – சாரதா பதிப்பகம், சென்னை – 14.
4. திருக்குறள் - மணிவாசகர் பதிப்பகம், சென்னை -1
5. சிலப்பதிகாரம்